தமிழீழ மக்கள் செய்தி அகம்.

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

## லண்டன் பிரச்சாரக்குரல் செய்தித்தொகுப்பு,

01 . 01 . 1985 இலிருந்து.......

* கப்டன் பண்டிதர் உட்பட நான்கு விடுதலைப்புலிகள் வீரமரணம். (09.01.1985).

* பலாலி விமான நிலையத்தில் விமானம் ஒன்று விடுதலைப்புலிகளால் தாக்குதல். (23.01.1985).

* 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். வாகனங்கள் சேதம்.
  பொலிகண்டியில் சம்பவம். (30.01.1985).

* கொக்கிளாயில் இராணுவமுகாம்மீது அதிரடித்தாக்குதல்.
  134 இராணுவத்தினர் பலி. 16 இளம்புலிகள் வீரமரணம். (13.02.1985).

* புளியங்குளத்தில் பொலிஸ் அதிரடிப்படை பொறுப்பதிகாரி உட்பட 7பொலிசார் பலி.
  ஜீப்பில் வந்தபோது விடுதலைப்புலிகள் தாக்குதல். (22.02.1985).

* சமூக விரோதிகள் செய்யும் துரோகத்தனத்தை வகிக்கும் உயர் பதவிகளால்
  மூடி மறைக்க முடியாது.
  முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மீது நடவடிக்கை. (07.03.1985).

* கேந்திர சிங்கள நகரம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்.
  பொலிஸ் புகையிரத நிலையங்கள் சேதம். 9பொலிஸ் கொமாண்டோக்கள் பலி.
  பலர் காயம். – மதவாச்சியில் சம்பவம். (13.03. 1985).

* தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பு அங்குரார்ப்பணம். (16.03.1985).

* ஹெலிகொப்டர் ஒன்றை சுட்டு வீழ்த்தினர் விடுதலைப்புலிகள்.
  பருத்துறை நாகர்கோவிலில் சம்பவம். (18.03.1985).

* மக்களின் செய்தித் தொடர்பு சாதனமாக வானொலி ஒலிபரப்பு
  விடுதலைப்புலிகளால் ஆரம்பம்.

* தினசரி அனைத்தும் இழந்து அகதிகளாக தமிழ்நாட்டுக் கரையை அடையும்
  அப்பாவித் தமிழ்மக்கள் கூறும் பரிதாபக் கதைகள்.
  அவை பற்றி இந்தியப் பத்திரிகைத்துணுக்குகள்.

---

விநியோகம்..
தமிழர் மறுமலர்ச்சி சங்கம்

**Tamil Marumalarchi Sangam**

42 Albany Street, London NW1 4EA. Tel 01-387 4739

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

9-2-1985

## உதிர்விலும் உரம் காண்போர்

அரச பயங்கரவாதிகளின் மிலேச்சத்தனமும் அடாவடித்தனங்களும், இன்னும் தொடர்ச்சியான அடக்குமுறையின் கோரமும் கொடுமைகளும், இப் பூமியைத் தினம் தினம் சங்காரம் செய்யும் இவ்வேளையில், தம் குருதியை இம் மண்ணிற்கு ஈந்து மரணித்துப்போன எமது இயக்க தோழர்களின் தற்தியாகமும் விரிவான பங்களிப்பும் திரத்துடன் நோக்கப்படவேண்டியனவே.

தமிழீழமெங்கினும் பரந்துபட்ட எமது கெரில்லா தளங்களில் ஒன்று (ஆவரங்கால்) எம்மால் முழுமையாக இனம் காணப்பட்ட ஒரு துரோகியால் 9-1-85 அன்று நேரடியாக காட்டிக் கொடுக்கப்பட்டு, ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவ வாகன சகிதம் வந்த பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினரால், மூன்று காவல் சுற்றுகளிடப்பட்டு முற்றுகையிடப்பட்டது இந்நிலையில் இடம் பெற்ற நேரடி மோதலில், பல எதிரிகளைக் கொன்றழித்த எமது வீரத் தோழர்களில் அறுவர் காயம் பட்டநிலையில் எதிரியிடம் உயிருடன் பிடிபடுதல் கூடாது என்ற இயக்க மரபிற்கிணங்க தம்மைத் தாமே அழித்துக்கொண்டனர். ஏனையோர் தம் ஆயுதங்களுடன் முற்றுகையை உடைத்து வெளியேறினர்.

பண்டிதர் அல்லது இளங்கோ எனப்படும் (சட்டன் ரவிந்திரன்-கம்பர்மலை) உட்பட நேரு (தில்லைச்சந்திரன்-அரியாலை) சாமி (தவரத்தினம்-ஆவரங்கால்). தவா (தவராஜா-அச்சுவேலி), சிவா (சிவேந்திரன்-ஆவரங்கால்), ரவி (பிரதாபன்-கல்வியங்காடு) ஆகிய அறுவருமே வீரமரணமடைந்த அப்போராளிகளாவார்

ஒரு இளைஞனின் சராசரி உணர்ச்சிகளையும் தன்னிலிருந்து களைந்து இம் மண்ணிற்குரித்தான துன்பதுயரங்களை தன் புலன்களிலிருந்து அந்நியப்படுத்தாமல் அவை தனக்குமுரித்தானவை என்ற சிந்தனை வெடிப்பால் 1977 இல் எமது இயக்க அங்கத்துவத்தையும் பின் எமதியக்க மத்திய குழுவின் அங்கத்துவத்தையும் தோழன் "பண்டிதர்" பெற்றான். தன் விடுதலையுணர்வுகட்கு ஒத்திசைவளிக்க மறுதலிக்கும் ஆஸ்துமா வியாதியின் அகோரத்தையோ அல்லது வறுமையை அநுபவிக்கும் குடும்பப் பின்னணியையோ எப்பரிமாணத்திலும் அவன் முதன்மைப் படுத்தியதில்லை. தன் இனத்தின் விடிவிற்கு, தன் ஆளுமையையும் ஆற்றலையும் அளித்த தோழன் பண்டிதர், என்றுமே எளிமையை நேசித்தவனாகவும், இயக்க போராளிகள் மீது தீவிர பற்றுள்ளவனாகவும், தான் சார்ந்த அமைப்பிற்கு என்றும் நேர்மையும் விசுவாசம் மிக்க உறுப்பினனாகவும் இருந்தது மாத்திரமின்றி அவற்றை அநுபவரீதியில் நிதர்சனப்படுத்தியுமிருக்கிறான், அதற்கு எமது இயக்கத்தின் இன்றைய நிர்மாணமே சாட்சி அவனது ஆளுமையினதும் அநுபவங்களினதும் வீச்சுக்களே, எமது இயக்கத்தில் அவன் பாரிய பொறுப்புக்களை வகித்தமைக்குரிய காரணங்களும் கட்டுமானங்களுமாகும். தமிழீழத்தில் நிதி, ஆயுதங்களிற்கு அவனே பொறுப்பாக இருந்தவன், தனக்கு ஓர் தார்மிகப் பொறுப்புக்கூட இருக்கின்றதென்பதை இராணுவம் முற்றுகை

யிட்ட அக்கணத்திற் கூடவுணர்ந்து வெற்றிகரமாக செயற்படுத்தினான். முற்றுகையிட்ட அக்கணத்திற்கூட, தன் சுய பாதுகாப்பைக் கருத்திற்கொள்ளாது அத்தளத்திலிருந்த இரு இளம் சிறுர்களையும் ஒரு வயோதிபத் தாயுட்பட பெண் சகோதரி ஒருவரையும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தினான். அதேபோலவே எமது இயக்க வீரர்கள் முற்றுகையை உடைத்து வெளிவந்தமைக்கும் பொறுப்புமிக்க தீரத்துடன் இறுதிவரை அவன் போராடியமையே காரணமாகும். ஆனால் இன்று அத்தகைய ஓர் வீரப்போராளி நம் மத்தியிலில்லை அவனது பணிகளே எம்முடன் ஜீவிக்கின்றன.

எமது இயக்கத்தின் பலமான நிர்மணாத்திற்கும் அதன் வளர்ச்சிப் போக்கிற்கும், பல பிரத்தியேக சூழ்நிலைகளில் கூட தம் முழு நேர ஊழியத்தை வழங்கிய எம் தோழர்களாகிய நேரு, சாமி, தவம், சிவா, ரவி ஆகியோரின் மரணத்திலும் இம் மண் ஒரு வாழ்வினைப் பெற்றிருக்கின்றது. சராசரி மனிதர்களாகவே பிறந்து தமிழீழத்தின் நிர்மாணத்திற்கு தமது வலுவான பங்களிப்பை ஈந்ததன் மூலம் தங்களை அவர்கள் தனித்துவப்படுத்திக் கொண்டனர் இவர்களது பணி புனிதத்தன்மை வாய்ந்ததுமட்டுமன்றி எமது இயக்க போராட்ட வரலாற்றிலோர் ஆளுமையின் முதிர்ச்சியையும் காட்டுவதாயுள்ளது. போராட்ட வாழ்வின் முன்னுதாரண புருஷர்களாக இவர்கள் தம்மை சிருஷ்டித்தும் கொண்டனர். இம் மண்ணிற்காய் இவர்கள் மரணித்தாலும் இவர்களது பணிகளை இம் மண் என்றுமே பத்திரப்படுத்தும்.

இதையிட்டு தமிழீழமக்கள் கலங்குவதும் அநுதாபப்படுவதும் யதார்த்தமெனினும் மாற்றீடாக எங்கள் தாயகத்து மண்ணை மீட்கும் போருக்கு அந்த ஒப்பற்ற மேலான பணிக்கு உங்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்குவதே தமிழீழ விடுதலைக்காய் மரணித்த போராளிகளுக்கு நீங்கள் செலுத்தும் கௌரவங்களும் அஞ்சலிகளுமாகும்.

மேலும் சிறிலங்கா அரசின் விஷமத்தனமான பிரச்சாரமானது இக்காட்டிக் கொடுப்பிற்கு பொது மக்கள்தான ஒத்துழைத்தனரெனவும், பெருந்தொகையான ஆயுதங்கள் எம்மிடமிருந்து கைப்பற்றப்பட்டதெனவும், இத்தளமே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையலுவலகமெனவும் கூறுகின்றன, ஆனால் இவற்றில் எந்தளவு நம்பகமும் இல்லை, பொது மக்களால் எம் தளம் காட்டிக்கொடுக்கப் படவில்லை என்பதனை நாம் நிச்சயப் படுத்திக்கொண்டோம் குறிப்பிட்டளவு ஆயுத இழப்புக்களிருப்பினும் அவை கூட எம் முழு ஆயுத இயலளவின் சொற்பளவேயாகும் தமிழீழமெங்கினும் பரந்துபட்ட எமது கெரில்லாத் தளங்களில் இதுவுமொன்றே தவிர "லலித்" கூறுவது போல் இது எமது தலைமையலுவலகமில்லை.

தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் விடுதலை இயக்கங்கள் பற்றி சிறீலங்கா அரசானது கீழ்த்தரமான பிரச்சாரங்களை பரந்தளவில் மேற்கொள்வதன் மூலம் எமது விடுதலையை தடுத்துவிட முடியாது. தமிழீழ மக்களின் தொடர்ச்சியான பூரண பங்களிப்புடன் நாம் ஒருமித்து இப்போராட்டத்தை வெற்றி கொள்ளவே திருவோம்

வெல்க தமிழீழம் !

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் ! !

வே. பிரபாகரன் — அரசியற்குழு

தலைவர்

தமிழீழ விடுதலைப் புலிகள் — தமிழீழ விடுதலைப் புலிகள்

வெளியீடு: பிரச்சார வெளியீட்டு வாரியம், தமிழீழ விடுதலைப் புலிகள்.

(2). பலாலி விமானநிலையத்தில் விடுதலைப்புலிகளால் விமானம் ஒன்று தாக்குதல்.

பலாலி விமான நிலையத்தில் 23.01.1985. அன்று உயர் அரசாங்க அதிகாரிகளையும், இராணுவ அதிகாரிகளையும் ஏற்றிவந்த விமானம் தமிழீழவிடுதலைப்-புலிகளின் ராக்கட் தாக்குதலுக்குள்ளாகியது. பலத்த பாதுகாப்புகள் நிறைந்த பலாலி விமான நிலையத்தினுள் நுழைந்த 4 விடுதலைப்புலிகள் இராணுவத்தினரின் பலத்த எதிர்ப்புகளின் மத்தியிலும் அவற்றை சமாளித்த நிலையில் விமானத்தை தாக்கினர். விமானம் சேதப்படுத்தப் படாத போதிலும் கெலிகொப்டர் ஒன்று சிறிது சேதத்திற்குள்ளானது.
( ராக்கட் - R.P.G.7 )

(3). விடுதலைப்புலிகளின் தளம் ஒன்றை முற்றுகையிட முற்பட்டபோது இராணுவத்திற்கு பலத்த அடி. பொலிகண்டியில் சம்பவம்.

30.01.1985. அன்று இரவு 11 மணி அளவில் பொலிகண்டி என்னும் இடத்தில் விடுதலைப்புலிகளின் தளம் ஒன்றை முற்றுகையிடுவதற்கு சிறிலங்கா இராணுவம் முற்பட்டபோது, விடுதலைப்புலிகள் இராணுவத்தை எதிர்த்த பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர். விடுதலைப்புலிகளை எதிர்ப்பதற்கு துணிவற்ற இராணுவம் அவ்விடத்திலிருந்து பின் வாங்கியது. பல மணி நேரம் நடைபெற்ற இச்சண்டையில் இராணுவத்தினரின் இரு-கவச வண்டிகளும், ஒரு டரக் வண்டியும் விடுதலைப்புலிகளின் ராக்கட் தாக்குதலுக்குள்ளாகி, முற்றாக சேதம் அடைந்ததுடன், 20 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

(4). போர் முனைக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு வந்ததில் [illegible] - விடுதலைப்புலிகள்.

கொக்கிளாய் இராணுவமுகாம் மீது அதிரடித்தாக்குதல்.
134 இராணுவத்தினர் பலி. 16 இளம் புலிகள் வீரமரணம்.

விவரம் - ஈழநாடு. பத்திரிகை. (03.03.1985).

(5). புளியங்குளத்தில் பொலிஸ் அதிரடிப்படை மீதான தாக்குதல்.
ஈழநாடு -(03.03.1985).

(6). முல்லைத்தீவு அரசாங்க அதிபர்மீது நடவடிக்கை.
ஈழநாடு. (08.03.1985).

(7). * முதன்முதலாக கேந்திர சிங்கள நகரம் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்.

* பொலிஸ், புகையிரத - நிலையங்கள் சேதம்.

* 9 பொலிஸ் கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்.

மதவாச்சியில் 13.03.1985. அன்று சம்பவம்.

விபரம் - ஈழநாடு. (15.03.85)

(8).

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பு அங்குரார்ப்பணம்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தை கடந்த 12 வருடமாக தொடர்ச்சியாக நெறிவலாப் போராட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு, துன்பங்களையும், துயரங்களையும், உயிரிழப்புக்களையும் துச்சமென மதித்துப் போராடி வருபவர்கள் விடுதலைப்புலிகளே, இன்று புலிகள் இயக்கம் மக்கள் மத்தியில் முழுமையாக விஸ்தரிக்கப்பட்டு ஒரு மக்கள் அமைப்பாக வளர்ந்து வருகின்ற இவ்வேளையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பாக விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டுள்ளது.

1970 களின் ஆரம்பத்தில் சிறீலங்கா அரசின் தரப்படுத்தல் கொள்கையில் பாதிப்புக்குள்ளானவர்கள் பல்லாயிரக்கணக்கான தமிழ் மாணவர்களே. மிகக் குறுகிய காலகட்டத்தில் எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களின் பங்களிப்பே பசளையானது.

இன்று பாடசாலைக் கல்வியைக்கூட கற்க வசதியின்றி, பாடசாலைகள் இராணுவத்தினர் தங்கும் இடமாகவும், மாணவர்கள் பயங்கரவாதிகளாகக்கருதப்பட்டு, கைதுசெய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளாகி வருகின்ற பரிதாப நிலையில், நமது மாணவர்கள் தமது ஒடுக்குமுறையின் கொடுமையையும் நமது மக்களின் எதிர்காலத்தினையும் கருத்திற்கொண்டு விடுதலைப்போராட்டத்திற்கு தமது பங்களிப்பினை வழங்க இவ்வாறான ஓர் அமைப்பு இன்றியமையாததே,

(9) ** கெலிகெப்டர் ஒன்றை சுட்டு வீழ்த்தினர். விடுதலைப்புலிகள்.
-------- ---- --- ------ -----------

பருத்தித்துறைக்குச் சமீபமாக உள்ள நாகர் கோவில் என்னும் இடத்தில் கடற்கரைப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் படைப்பிரிவொன்று பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் - விடுதலைப்புலிகளைஅளித்து தமிழ்மக்களை பூண்டோடு அளிக்க கங்கணம் கட்டியிருக்கும் சிறீலங்காஅரசின் கூலிப்பட்டாளங்களுள் ஒன்றான விமானப்படையினர் இரண்டு விமானங்கள் ஒரு கெலிகெப்டர் சகிதம் இப்பிரதேசத்தைச் சுற்றி வளைத்து வட்டமிட்ட வண்ணம் புலிகளைத்தாக்க முன்வந்தனர்:

இச்சந்தர்ப்பத்தில் தமக்கே உரித்தான துணிச்சலுடன் விமானப்படையினரை யினரை விடுதலைப்புலிகள் எதிர்த்துச் சமரிட்டனர். இதனால் விமானப்படை கெலிகப்டர் ஒன்று கரும் புகையைக்கக்கிய வண்ணம் சேதமுற்ற நிலையில் வெகு தூரத்துக்கப்பால் விழுந்து நொருங்கியது. இதில் வந்திருந்த அனைத்து விமானப்படையினரும் இறந்திருக்கலாம் எனப் பூரணமாக நம்பப்படுகிறது. ஏனைய இரண்டு விமானங்களும் விடுதலைப்புலிகளை எதிர்க்கும் துணிவின்றி பின்வாங்கிவிட்டன.

இச்சம்பவம் பருத்தித்துறைக்குச் சமீபமாக உள்ள நாகர்கோவில் என்னுமிடத்தில் 18.03.1985.அன்று நடைபெற்றது.

(10)* * தமிழீழ மக்களின் செய்தித்தொடர்பு சாதனமாக வானொலி ஒலிபரப்பு விடுதலைப்-
புலிகளால் ஆரம்பம்..
****** ******

தமிழீழ மக்களின் குரலாக ஒலிக்கும் செய்தித்தொடர்பு சாதனமாக உத்தியோக பூர்வ வானொலி ஒலிபரப்பு ஒன்றை தமிழீழ விடுதலைப்புலிகள் ஆரம்பித்துள்ளனர். இச்சேவை சிற்றலை [illegible] மீற்றர் அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது.

போர்முனைக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு வந்ததில்லை - புலிகள்

3-3-1985
ஈ.ழநாடு

## விடுதலைப்புலிகள்

- ஈழநாடு -

# 16 போராளிகளுக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

கொக்கிளாய் ராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது பலியான தமிழீழ விடுதலைப் புலிகளின் 16 போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தி அவ்வியக்கத்தால் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

போர் முனைக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு -. வந்ததில்லை என்ற தலைப்பில் 'ராணுவமுகாம் தாக்குதல்' பற்றி விபரமாக இப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''அரசானது தமிழீழ மக்களை தம் பிரதேசத்திலிருந்து விரட்டியடிக்கும் நோக்குடன் சிங்கள சமூகத்திலிருந்து விடுபட்ட சிலருக்கு ஆயுதப்பயிற்சி அளித்தும் ஆயுதமயப்படுத்தியும் தமிழீழப் பிரதேசங்களில் குடியமர்த்தும் நோக்குடனும் ராணுவ முகாம்களை எங்கிலும் விஸ்தரித்து வருகின்றது.

''இதன் தொடர்பாக ஆயுதப்பயிற்சியளிக்கப்பட்ட குடியேற்றத்திற்கு முன்னேற்பாடாக கொக்கிளாயில் நவீனரக ராணுவ ஆயுதத் தளபாடங்களுடன் பலப்படுத்தப்பட்ட ராணுவமுகாமொன்று அமைக்கப்பட்டது. இந்த ராணுவ முகாமின் அமைவால் அப்பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ்மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டதோடு அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டு தம்சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளவர். இவ்வாறான அரசின் சகலவகையான அடக்கு முறைகளை தடுக்க வேண்டிய கட்டுப்பொறுப்பு தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் அனைத்து விடுதலை அமைப்புகட்குமுண்டு

''இவ்வகையில் புதியதோர் உத்வேகத்தை கொடுக்கும் வகையில் 13-02-85ல் ராணுவ முகாம் ஒன்று [கொக்கிளாய்] முதற்தடவையாக வெற்றிகரமாக தாக்கப்பட்டது. கடும் விமானத் தாக்குதலிற்கு மத்தியிலும் சுமார் 5 மணித்தியாலங்களாக எமது போராளிகட்கும் ராணுவத்தினர்க்குமிடையே நடைபெற்ற கடும் சமரில் ராணுவ தரப்பில் நூற்றியாறு சிப்பாய்கள் கொல்லப்பட்டு இருபத்தைந்து பேர்கள் படுகாயமுற்றனர். இதேவேளை கொக்கிளாய் ராணுவமுகாமிற்குதவியாக முல்லைத்தீவிலிருந்து அனுப்பப்பட்ட ராணுவ வண்டித் தொடர்மீது ஏனையஎமது போராளிகள் நடாத்திய தாக்குதலில் மேலும்இருபத்யெட்டு ராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ராணுவ வாகனங்கள் சேதமடைந்த நிலையில் ஏனையோர் பின் வாங்கினர். இதன் பிரதிபலிப்பாக அரசியல் ரீதியான சில அனுகூலங்கள் இம்மண் பெற்றிருப்பது எமது முழு வெற்றியையே காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் குறித்த சுவரொட்டிகளும் நேற்று காணப்பட்டன.

### உரிமை கோரி...

கடந்த பெப்ரவரி 22ம்திகதி புளியங்குளத்தில் நடைபெற்ற தாக்குதலில்போது ஜீப்வண்டியில் சென்ற பொலிஸ் அதிரடிப்படையைச்சேர்ந்தபொறுப்பதிகாரி உட்பட ஏழு அதிரடிப்படை பொலிசார் கொல்லப்பட்டதகுற்கும் தாமே பொறுப்பு என்று அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[மா].

15/3/85 ஈ.முரசு

# மதவாச்சிக்கு புலிகள் உரிமை!

(யாழ்ப்பாணம்)

மதவாச்சிப் பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கும், மதவாச்சி ரயில் நிலையத் தகர்ப்புக்கும் ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' இயக்கம் உரிமை கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இதுசம்பந்தமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

வவுனியாவிலிருந்து ஆனையிறவு வரை 2லட்சம் கொண்ட சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்கவும், மன்னார் பகுதி மக்கள் விரட்டியடிக்கப்பட்டு, அகதிகளாக்கப்படுவதன் காரணமாகவும், மதவாச்சிக் காடையர்களை எச்சரிக்கும்முகமாகவும் இந்தத் தாக்குதலை நடாத்தினோம். இச்சம்பவத்தில் 8 பொலிசார் மரணமானார்கள்.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

8.3.1986

# 'இனத் துரோகிகளை இனம் காண்போம்'
# விடுதலைப் புலிகள் துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

"இனத்துரோகிகளை இனம் காண்போம்" என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அத்துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"சகல வழிவகைகளிலும், தமிழீழ மக்களுக்கெதிராக சிறீலங்கா அரசானது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் சமூக பொருளாதார, கலாச்சார ரீதியிலான அடக்குமுறைகள் தொடர்ந்தும் விரிவடைந்தவாறே செல்கின்றன. தொடர்ச்சியான இனப்படுகொலையும் சொந்த மண்ணிலே எமது மக்கள் அகதிகளாக்கப்படுவதும் பொருளாதாரரீதியிலான தடைகள் ஏற்படுத்தப்படுவதும், இன்னும் சமுதாயத்திற்கு அத்தியாவசியமான மருந்துவகைகளை தமிழீழ வைத்தியசாலைகளைப் பொறுத்தவரை தடைப்படுத்துவதும் அரச இராணுவத்தின் காடைத்தனமான செயற்பாடுகள் மக்களை விசனப்படுத்துவதும் இப்பகுதி மக்கள் பரிச்சயமாகப் பட்டுவருவன.

"நெருக்கடிமிக்க இக்கால நிலையில் தமிழீழப் பிரதேசங்களில் சமூக விரோத சக்திகளால் எம்மக்கள் தொடர்ந்தும் கருவறுக்கப்படும் நிலையை களையவேண்டிய பாரிய பொறுப்பிலிருந்து தமிழ்த் தேசிய விடுதலையை முன்னெடுக்கும் எச்சக்தியும் விடுபடமுடியாது. சமூகத்தின் சகல மட்டங்களிலுமுள்ள இவ்விரோத சக்திகளை அவர் தம் செயற்பாடுகளைக் கொண்டு இனங்காணக்கூடியதாயிருப்பினும் சமூகத்தின் அடித்தளத்திலுள்ள சமூக விரோத சக்திகளையே மக்கள் நேரடியாகக் காண்கின்றனர். ஆனால் சமூகத்தில் உயர் அந்தஸ்தினை வகித்துக்கொண்டு, மிக அந்தரங்கமான முறையில் இனங்காணமுடியாததும், மன்னிப்புக்கப்பாற்பட்டதுமான எத்தனையோ துரோக நடவடிக்கைகளை தமது விருத்தி, சுயநலன் என்பவற்றுக்கு இப் "பெரியவர்கள்" எனப்படும் இச்சமூகவிரோதிகள் மேற்கொள்கின்றனர்.

"மிகக் கொடுமையான அவலத்தின் அலைகளில் எமது மக்கள் தத்தளிக்கும் போது அரசின் நெருக்கமான அடிவருடிகளாக இருந்தவண்ணம் தம்மைப் பாதுகாத்துக்கொண்டு எம் மக்களின் அவலங்களுக்கு காரணமாகவும் இருப்பவர்கள் எமது மக்களால் மன்னிக்கப்பட முடியாதவர்களே. இச் சமூக விரோத சக்திகளின் அந்தஸ்து, ஆளுமை, கபடோபாயம் அறிவுத்திறன் என்பன மூலம் வெளிவரமுடியாத தொடர்புகளும், நியாயமற்ற இழிவுச் செயற்பாடுகளும் இவ்விரோதிகளை ஆதரவு சக்திகள் மனரீதியாக அறியாதிருக்கலாம். ஆனால் இவர்களால் பாதிப்புற்ற மக்கள் உறுதியாக அறிந்திருக்கின்றனர். அநுபவித்தே அவலப்படுகின்றனர்.

இவ்வகையிலேதான் முல்லைத்தீவு மக்களின் நிலையும் இச் சமூக விரோதிகளின் நடவடிக்கைகட்கு ஆட்பட்டிருக்கின்றது. உதாரணத்துக்கு தமிழீழப் பிரதேசங்களில் முல்லைத்தீவு மாவட்டமும் ஒன்றாகும். எண்ணிக்கையற்ற முறையில் தமிழ்மக்கள் பலர் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்டும், அவர்களது உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டும், இன்னும் மோசமான நிலையில் தங்கள் இருப்பிடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டும், அவ்வகதிகள் முகாம்களில் எவ்வித அடிப்படை வசதிகளும் அளிக்கப்படாமலும் அம்மக்கள் துயரப்படுகின்றனர்.

பரிதாபகரமான இந்நிலையில் மனிதாபிமான நோக்கோடு பல்வேறு சமூக பொது ஸ்தாபனங்களும் தமிழீழ மக்கள் அனைவரும், தம்மால் இயன்றளவிற்கேற்ப இம் மக்களுக்கு உதவிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அப்பிரதேசத்துக்குரிய அரச உயர் நிர்வாகபீடப்பிரதிநிதியான அரசாங்க அதிபர் சுந்தரம் இம் மக்களின் துன்ப துயரத்திற்கு பரிகாரமாக தன் அதிகார வரம்பிற்குட்பட்ட வகையில் எவ்வகையான நடவடிக்கையும் கூறும்படியில் கூட மேற்கொள்ளவில்லை. பதிலாக துரோகத்தனத்திலேயே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

முல்லைத்தீவு மக்களின் சமூக நலன்களையும் அத்தியாவசிய தேவைகளையும் பூர்த்தி செய்து நிறைவேற்றுவதில் தேவையான அதிகாரங்களைக் கொண்ட அரசாங்க அதிபர் சுந்தரலிங்கம் இதற்கு மாறுபாடாக நடந்து கொண்டமையை முல்லைத்தீவு மக்கள் நன்கறிவர். சந்திரசேகர விகாரை, அருகிலுள்ள கிராமம் என்பனவற்றில் நடந்தவற்றைப் பெரிதும் சுந்தரலிங்கம் முழுமையான அளவில் ஒரு பக்கச் சார்பாக அப்பகுதியில் குடியேறிய சிங்கள மக்களுக்காகவும், தனக்காகவும் அரசாங்க அதிபராக இருந்துள்ளார். தன் இனத்துக்குத் தான் ஆற்றவேண்டிய தார்மீகக் கடமைகளையாவது நிராகரித்திருப்பினும் தனக்கும் தன் பதவிக்குமுரிய மதத் தலைவர்களையாவது அப்பகுதி வாழ் தமிழ் மக்களிடமிருந்து பெறவேயில்லை. பதிலாக நிம்மதியிழந்த மக்களுக்கும் இராணுவம் கிடைக்கப்பெற்ற தலை துரோகத்தனங்களே! எவராலும் மன்னிக்கமுடியாத அவற்றினை முல்லைத்தீவு மக்கள் சார்பில் தமிழீழ மக்கள் முன் வைக்கிறோம்.

முல்லைத்தீவு மக்களது அகதிகள் நிவாரணத்திற்கென ஒதுக்கிய நிதி, பொது ஸ்தாபனங்களால் இவருடாக வழங்கப்பட்ட நிதியுதவிகளை நிராகரித்ததோடு மிகுதி நிதியைத் தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கு வழங்கியமை.

டொலர், கென்ட், கொக்கிளாய், நாயாறு பகுதிகளிலிருந்து சிங்கள குடியேற்றவாசிகட்குப் புதிய உதவிகளை சிறு விசேடத்தைக் காட்டி இராணுவ வெடிபொருட்கள் வழங்கப்பட்டுத் தொழில்வாய்ப்பின்றி இருக்கும் தமிழ்மக்களுக்கு வழங்க மறுத்தமை.

1984ம் நிதியாண்டிற்கு முல்லைத்தீவு மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியை நேரடியாக தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கு வழங்கியமை.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான முல்லைத்தீவிலுள்ள குருந்தூர் மலைக்குடியில் பௌத்த கோயில் நிறுவுவதற்கு ஏற்ற உதவிகளை, அவ்வூர் தமிழ் மக்களின் நலன்கள் இதனால் மோசமடைவதைக் கண்டும் வழங்கியமை.

அகதிகள் நிவாரணத்திற்கு என வழங்கப்பட்ட பால்மா, சீனி மீதி போகத்தில் கள்ளமோசடி செய்தமையுடன், அவ்வரசப்படும் இம்மக்களிடையே கஷ்டம் பெருகியமை.

1983ம் ஆண்டு வெள்ள நிவாரணநிதியிலிருந்து மோசடியாக ஒரு தொகையை எடுத்தமை.

உயர் நீதிமன்ற நீதிபதியொருவரூடாக, தமிழீழ போராளிகள் (சகல விடுதலை அமைப்புகள் உட்பட) பற்றிய தகவல்களை இராணுவத்திற்குக் கொடுத்தமை (ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது.)

கடத்தப்படும் அரச வாகனங்களுக்கு அவ்வாகனப் பொறுப்பாளரே தண்டம் கொடுக்க வேண்டுமென நிர்ப்பந்தித்தமை.

தென்னைமரவாடி, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், தண்ணிமுறிப்பு, பொனமலை, குமிழமுனை, ஒதியமலை ஆகிய பகுதிகளிலிருந்து அகதிகளாக வெளியேறிய தமிழ் மக்களை மீண்டும் குடியமர்த்தக்கோரிய போது அதனை ஆதரிக்கும் கொண்டமை.

விரட்டியடிக்கப்பட்ட காடையர் குடியேற்றத்தை மீண்டும் ஆயுதங்களுடன் குடியேற்ற முழுமூச்சாக முயற்சி செய்து வந்தமை.

பணத்திற்காக அதிகார துஷ்பிரயோகத்தில் தொடர்ந்து ஈடுபட்டமை. (நீதவான் நீதிமன்ற நீதிபதியாக இருந்த காலம்தொட்டு)

இதுபோன்ற ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே நாம் விசாரணைகளை மேற்கொண்டு இவருக்கு மரண தண்டனை நிறைவேற்றினோம்.

எமது சமூக அமைப்பிலே, உயர் அந்தஸ்தினை அனுபவிக்கும் பல சமூக விரோதிகள் தம்பதவி, பணம், அந்தஸ்து, ஆளுமை, தந்திரோபாயங்கள் போன்றவற்றால் மூடிமறைக்கப்படும் தம் விரோத செயற்பாடுகளுடன் மக்கள் தாமே மனிதர்களாகவே உலாவி வருகின்றனர். ஆனால் பல சமூக காரணிகளின் விளைவாக சமூகத்தின் அடித்தளத்திலிருந்து வரும் சமூக விரோதிகளே தம் சமூகவிரோத செயற்பாடுகளுக்கு தண்டனையை அனுபவிப்பதை தமிழீழ விடுதலை காண்கின்றோம். அதேசமயம், உயர் அந்தஸ்திலுள்ள இச்சமூக விரோதிகள் தண்டனைகளிலிருந்து தப்பித்த வண்ணமே இருக்கின்றனர். எவ்வேறுதக்கைய சமூகவிரோதிகளை தமிழீழ மண்ணிற்கு இனங்காட்டவேண்டிய பாரிய பொறுப்பில் தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் எச்சக்தியும் நிராகரிக்க முடியாது. (மா)

# கண்ணீர் கதை

மக்கள் குரல் 1-03-85.

திருப்பூர், மார்ச் 1

இலங்கையில் தமிழர் பகுதிகளில் சிங்கள ராணுவத்தினரின் வெறியாட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் தமிழகம் ஓடி வந்த அகதிகளில் சிலர் திருப்பூர் கொண்டு வரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கூறும் கண்ணீர் கதைகள் நெஞ்சை உலுக்குவதாக உள்ளது.

மண்டபம் வந்து சேர்ந்த இலங்கை அகதிகளில் 110 பேர் திருப்பூர் நகருக்கு கொண்டு வரப்பட்டனர்.

33 ஆண்களும், 35 பெண்களும், 21 சிறுவர்களும், 21 சிறுமிகளும் உள்ள இவர்களை மண்டபத்திலிருந்து தனி பஸ்களில் திருப்பூர் தனி தாசில்தார் டி.சி. நடராஜன் அழைத்து வந்தார்.

அவர்கள் தங்க திருப்பூர் நகர மண்டப கட்டிடத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த அகதிகளை மக்கள் குரல் நிருபர் சந்தித்து பேசினார். அப்போது, அவர்கள் கூறிய சோகக் கதைகள் நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

## சிங்களவர் கொடுமையால் வியாபாரம் பறி போனது

சிங்களவர் அட்டூழியத்தால் 30 வருடமாக செய்து வந்த மளிகை வியாபாரம் நசித்துப் போனது என்று கண்டியை அடுத்த மாத்தளையை சேர்ந்த அரியநாயகம் (வயது 60) உருக்கமுடன் கூறினார். மளிகை வியாபாரத்தை விட்டு விட்டு பிறகு கருவாடு வியாபாரம் செய்ததாகவும் அதுவும் சரியில்லாமல் வாழ வழியில்லாமல் கஷ்டப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மனைவியையும் 4 பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு அவர் தமிழகம் ஓடி வந்து விட்டார்.

## அரசு ஊழியர் குடும்பம்

மன்னார் என்ற ஊரில் இலங்கை மீன் கார்ப்பரேஷன் அலுவலகத்தில் மாதம் ரூ. 650 சம்பளத்துக்கு வேலை பார்த்தவர் எஸ். பாலச்சந்தர். இவருக்கு திருமணமாகி ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் இருக்கிறார்கள். சொந்த வீடும் இருக்கிறதாம்.

தமிழர்களை ரோட்டிலும், வீட்டிலும்சிங்கள ராணுவத்தினர் ஈவு இரக்கமின்றி சுட்டும் தாக்கியும் கொல்கிறார்கள். அதை கண்டு அஞ்சி உயிர் பிழைத்து கொள்ளவே தமிழகம் ஓடி வந்ததாகவும் பாலச்சந்தர் கூறினார்.

## அகதியான தொழில் அதிபர்

யாழ்ப்பாணத்தை அடுத்த ஒட்டு மடம் என்ற ஊரில் குளிர்பானம் விற்பனை செய்து வந்தவர் சு. ஏகாம்பரம். மாதம் ரூ. 3 ஆயிரத்துக்கு மேல் வருமானம் பெற்று வந்தார். அவரும் குடும்பத்துடன் தமிழகம் ஓடி வந்து விட்டார்.

அவர் கடை வைத்திருந்த பகுதியில் இருந்த ரூ. 5 லட்சம் மதிப்புள்ள 140 கடைகளை ஒரு நாள் சிங்கள ராணுவத்தினர் அழித்து விட்டார்கள். அதில் ஏகாம்பரத்தின் ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கடையும், வீடும் சேதமடைந்ததாக ஏகாம்பரம் கூறினார்.

ஆண்டாள் குளத்தை சேர்ந்தவர் கணேசன் (வயது 46) டிராக்டர் டிரைவரான இவர் மாதம் ரூ. 700 வரை சம்பாதித்து வந்திருக்கிறார். அவர் கிராமத்திற்குள் ஒரு முறை சிங்களவர் புகுந்து தமிழ் பெண்களை கற்பழித்து சென்றிருக்கிறார்கள். அதைக் கண்டு அங்கிருக்க பயந்து கணேசன் குடும்பத்துடன் ஓடி வந்திருக்கிறார்.

உயிலின் குளத்தை சேர்ந்தவர் நகுலேஸ்வரன் (வயது 42) மனைவியையும், 4 பெண் குழந்தைகளையும், 1 ஆண் குழந்தையையும் அழைத்து கொண்டு இந்தியா ஓடி வந்திருக்கிறார்.

அவருடைய தம்பி பெயர் அருளானந்தம் (வயது 18). அவர் விடுதலை புலிகள் இயக்கத்தில் பணியாற்றி வந்திருக்கிறார். அவரை சிங்கள ராணுவம் சுட்டுக் கொன்றிருக்கிறது. அவருடைய சடலத்தைக் கூட பார்க்க முடியாமல் தாம் உயிர் பிழைத்தால் போதும் என்று தமிழகம் ஓடி வந்ததாக நகுலேஸ்வரன் கூறினார்.

பெசாலை பகுதியில் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த 10 ஆயிரம் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தங்கரத்தினம் (வயது 26) என்பவர் கூறினார்.

திருப்பூர் கோட்டாட்சி அலுவலக அதிகாரி வி.எஸ். கதிர்வேலு, தாசில்தார் கே. சுப்பிரமணியம், துணை தாசில்தார் கிருஷ்ணசாமி, தண்டபாணி ஆகியோர் இலங்கை அகதிகளுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தார்கள்.

# இலங்கை அகதி கண்ணீர் பேட்டி

## தாராபுரம் மார்ச் 10

## அக்காள் அண்ணன் மற்றும் 11 நண்பர்களை என் கண் எதிரே ராணுவம் சுட்டுக் கொன்றது என்று தப்பி வந்த இலங்கை அகதி கூறினர்.

-10/3/85

சிங்களராணுவத்தினரின் கொடுமைக்கு பயந்து இலங்கையில இருந்து ஏராளமான தமிழர்கள் அகதிகளாக தமிழ் நாட்டுக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

இந்த அகதிகளில் 82 பேர் தாராபுரத்துக்கு தந்து உள்ளனர்.

இவர்களில் ஒருவர் புஷ்பராஜ் (வயது 21).

சிங்கள ராணுவத்தினரின் அட்டூழியம் குறித்து அவர் கூறியதாவது.

எனது தகப்பனார் செல்வராஜ், யாழ்ப்பாணத்தில்நகை கடையும் ஐஸ்கிரீம் கடையும் வைத்து இருந்தார். எனக்கு அண்ணன்களும் ஒருஅக்காளும் உண்டு. நான் 10வது வகுப்பு வரை படித்து இருக்கிறேன்.

நகை கடையையும் ஐஸ்கிரீம் கடையையும் எனது அண்ணன்கள் கவனித்து வந்தனர்.

கல்முனை என்றஇடத்தில் எங்கள்வீடு உள்ளது. அங்கு ராணுவத்தினர் வந்து என் பெற்றோரையும் அண்ணன்களையும் பிடித்து சென்று விட்டார்கள். நான்மட்டும் தப்பி விட்டேன்.

பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள எங்கள் நகை கடைக்கு சென்றேன். நகை கடையை ராணுவத்தினர் அடித்து உடைத்து கொள்ளையடித்து இருந்தனர். அங்கிருந்த நகைகளையும் கொள்ளையடித்து சென்று இருந்தனர்.

நானும் மற்றும் எனது நண்பர்களும் சைக்கிளில் வந்து கொண்டிருந்தோம். அப்போது அந்த வழியாக ராணுவத்தினர் வந்ததும் நாங்கள் சைக்கிளில் இருந்து இறங்கி பயந்து நடுங்கி கொண்டே நின்றோம். அவர்கள் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். இதில் எனது நண்பர்கள் 11பேர் குண்டு பாய்ந்து பிணமாக சாய்ந்தனர். நான் மட்டும் தப்பி ஓடி ஒரு இடத்தில் மறைந்திருந்து பார்த்தேன்.

11 பேர் பிணங்களையும் லாரியில் ராணுவத்தினர் ஏற்றினார்கள்.

அந்த இடத்தில் இருந்து ஓட முயன்ற போது ராணுவத்தினர் என்னை பார்த்து விட்டனர். என்னை பிடித்து என் குடும்பத்தினரை அடைத்து வைத்திருந்த இடத்துக்கு இழுத்து சென்று கட்டி போட்டனர்.

விடுதலைப்புலி எங்கு இருக்கிறார்கள் என்று கேட்டு என்னை அடித்து சித்ரவதை செய்தார்கள். எனக்கு தெரியாது என்று நான்கூறினேன்.

என் கண் எதிரேஅக்காள் சரஸ்வதியையும் அண்ணனையும் கட்டி வைத்து சுட்டு தள்ளினார்கள்.

# தப்பி வரும் தமிழர்கள் நடுக்கடலில் கொலை

தினமலர் 5-3-85

## அகதிகளை தடுக்க அராஜகம்

கொழும்பு, மார்ச் 4— உயிர் தப்பி தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வரும் தமிழர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்கின்றனர்.

கடந்த 4நாட்களில் 247அகதிகளை தப்பவிடாமல் பிடித்து வைத்திருப்பதாக இலங்கை கடற்படையினர் கூறினர். இந்த அகதிகள் யாழ்ப்பாணம் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று 13அகதிகள் நடுக்கடலில் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் 3படகுகளில் வந்த 140அகதிகள் பிடித்துச் செல்லப்பட்டதாகவும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர் சிவசிதம்பரம் இன்று தெரிவித்தார். வெளியேறும் அகதிகளை திட்டமிட்டு அச்சுறுத்தும் செயல் இது என்றார் அவர்.

ராணுவத்தின் மிரட்டலுக்கும் கொடுமைக்கும் அஞ்சி உயிர் தப்பினால் போதும் என்று, உடமைகளை விட்டு விட்டு ஏராளமான தமிழர்கள் வெளியேறி வருகின்றனர். இது வரை 12000பேர் தமிழகம் வந்துள்ளனர். சிங்களவர்களுக்கு இவர்களுடைய வீடு, நிலங்களை சொந்தமாக்கி குடியேற்றும் செய்யும் முயற்சியில் ராணுவம் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

விரட்டப்பட்ட தமிழர்கள் அகதிகளாக இந்தியாவுக்கு மிக அதிக எண்ணிக்கையில் சென்று விட்டால் இனப்பிரச்னையில் இந்தியா தலையிடுவதற்கு நியாயமான காரணம் கிடைத்துவிடும் என்று இலங்கை அஞ்சுகிறது. இதனால் அகதிகளை வெளியேறாமல் தடுக்கும் முயற்சியில் ராணுவம் சிலநாட்களாக ஈடுபட்டு வருகிறது. அகதிகள் பிடிக்கப்பட்டு காவல் நிலையத்திற்கும் ராணுவ முகாம்களுக்கும் கொண்டு போகப் படுகின்றனர். அவர்களுக்கு என்ன நேரிடும் என்பது தெரியவில்லை.

தனது கொடுமைகளை திசை திருப்ப, அகதிகள் வெளியேறுவதற்கு தமிழ்த் தீவிரவாதிகளே காரணம் என்று இலங்கை கூறி வருகிறது. எங்களைச் சேர்ந்தவர்கள் அகதியாக வெளியேற தீவிரவாதிகளின் அச்சுறுத்தலே காரணம் என்று சில தமிழர்களை சொல்ல வைத்து அதை ரூப

சென்ற ஆண்டு பிப்ரவரி முதல் அகதிகள் தமிழகத்துக்கு அதிகமாக செல்ல ஆரம்பித்தனர். வடக்கு கடலோரப்பகுதியில் வசிப்பதையும், மீன்பிடிப்பதையும் அரசு தடை செய்த பிறகு ஏராளமான மீனவர்கள் குடும்பத்துடன் சென்று கொண்டிருக்கிறனர். இது வரை மன்னார், பேசாலை பகுதிகளிலிருந்து 13ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் சென்றுள்ளனர். இலங்கை கடற்படையின் செயலால், உயிர்தப்பி தமிழகம் செல்லும் அகதிகளின் எண்ணிக்கையும் இனி குறையக்கூடும்.

இதனிடையே, சிங்கள புத்த தலைமை குருமார்கள் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயகாவுக்கு குடியுரிமை வழங்கவேண்டும் என்று ஜெயவர்த்தனாவை சந்தித்துக் கூறியுள்ளனர். தீவிரவாத சிங்களரான முன்னாள் அமைச்சர் சிரில்மாத்யூ மீதான குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறுமாறும் அவர்கள் வற்புறுத்தினர்.

இலங்கையின் மிகப் புனிதமான புத்த ஆலயமாகக் கருதப்படும் அண்டியில் (புத்த சின்னம் வைக்கப்பட்டுள்ள இடம்) சந்தானந்த மகாநாயக எனும் மதகுருவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் இந்த கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

குடியுரிமை இல்லாத போதிலும் கச்சத்தீவு பிரச்னை தோட்டத் தொழிலாளர் பிரச்னை ஆகியவற்றிற்கு தீர்வு காண்பதிலும் இந்தியாவுடன் நல்லுறவு இருக்க வேண்டும் என்பதிலும் பண்டார நாயகா அக்கறை காட்டி பேசி வந்தார். உரிமைகளை திரும்பவும் வழங்கி இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு அவரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று புத்தமத குருமார்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்.

---

# சிதம்பரத்தில் தமிழ் அகதிகள்

தினமலர் 23-2-85

சிதம்பரம், பிப். 22— சிதம்பரம் பகுதிக்கு இலங்கை தமிழ் அகதிகள் 240 பேர் வந்துள்ளனர். இவர்கள் வல்லம் படுகை, கிள்ளை, ஆகிய ஊர்களில் உள்ள புயல் பாதுகாப்பு கட்டிடத்தில் முகாமிட்டு இருக்கிறார்கள்.

கிள்ளை முகாமில் 3S குடும்பத்தைச் சேர்ந்த 174 இலங்கை தமிழ் அகதிகள் இருக்கிறார்கள். இவர்களில் 60 பெண்களும், 48குழந்தைகளும் இருக்கிறார்கள். இந்த முகாமில் உள்ள இலங்கை பெசாலையை சேர்ந்த ஆனந்தா குருஸ் என்பவர் கூறுகையில் இந்த முகாமில் உள்ள அனைத்து தமிழ் அகதிகளும் மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். நாங்கள் 40 படகுகளில் இலங்கையிலிருந்து தப்பித்து ராமேஸ்வரம் வந்தோம்.

இலங்கையில் எங்கள் ஊருக்கு அருகாமையிலுள்ள உயிலம்குளம், வட்ட கண்டல், சாத்தான்குளம், வரம்பு கடந்தான், பரப்பான் கண்டல், வங்காலை போன்ற ஊர்கள் அனைத்தையும் சிங்கள ராணுவத்தினர் தீயிட்டு கொளுத்தி அழித்துவிட்டு அங்கிருந்த பொருட்கள் அனைத்தையும் சேதப்படுத்தி விட்டார்கள். குழந்தைகளையும், பெரியவர்களையும் சுட்டு வீழ்த்தி வருகிறார்கள்.

மார்சலஸ் என்ற மற்றொரு மீனவர் கூறுகையில் 6மாதமாக மீன்பிடிக்கும் தொழிலை இலங்கையில் செய்ய முடியாமல் வீட்டுக்குள்ளேயே அடைப்பட்டு கிடந்தோம். அந்த 6மாத காலத்தில் கையிலுள்ள பொருளை விற்று, அந்த பணத்தைக் கொண்டு உயிர் வாழ்ந்து வந்தோம். தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ராணுவம் திடீர் திடீரென தாக்குதல் நடத்துகிறது. ஆகையால் அந்த பகுதியில் எங்களால் நிம்மதியாக வாழமுடியவில்லை. இங்கு வந்த பிறகு தான் (தமிழ்நாட்டில்) எங்களால் நிம்மதியாக தூங்க முடிகிறது என மார்சலஸ் கூறினார்.

இந்த முகாமில் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 48ம் 1வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஐந்தும் உள்ளது. அந்த சிறு குழந்தைகள் அழுகை ஒலி அங்கிருப்பவர்களின் உள்ளத்தை உருகசெய்கிறது. இந்த முகாம் சிதம்பரம் அருகில் உள்ள "கிள்ளை" புயல் பாதுகாப்பு கட்டிடத்தில் உள்ளது.

